<u>கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>

**S.O.P. No.**347/2022

PW. 1

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (1969 ஆம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு. எம்.என்.செந்தில்குமார், எம்.எல்., தனி நீதிபதி (தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர்/முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு) அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | முரளிதரன் |
| தகப்பனார் பெயர் | சிதம்பரம் |
| வயது | 61 |
| முகவரி | கோயமுத்தூர் |

**<u>9 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில்தான் நானும், என் மனைவி மற்றும் குடும்பத்தினர்கள் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். என் மாமனார், மாமியார் குடியிருந்த வீட்டின் விலாசம் கதவு எண் 3, சீனிவாசா கார்டன், இந்திரா கார்டன் ரோடு, கோயமுத்தூர் என்றால் சரிதான். என் மாமனார் மாமியார் வீட்டிற்கு அருகிலேயே 9 ம் எதிர் மனுதாரருக்கு வீடு உள்ளது என்றால் சரியல்ல. என் மாமனார் மாமியாருக்கு சொந்த ஊர் பொள்ளாச்சி என்றால் சரிதான். என் மாமனார் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றால் சரிதான். என் மாமியார் ஆனைமலையில் தட்டச்சு பயிற்சி நிலையம் வைத்திருந்து பின்னர் அதை மூடிவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் மாமியாருக்கு ஆனைமலை சுற்றியுள்ள பகுதியில் சொந்தமாக சொத்துகள் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் பணி ஓய்வு பெற்றதற்கு அவரது ஓய்வூதியம் வந்தது என்றால் சரிதான். 9 ம் எதிர்மனுதாரர் என் மனையின் சகோதரர் என்றால் சரிதான். அவர் வங்கியில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். 9 ம் எதிர் மனுதாரரின் மனைவி LIC யில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவர்களுடைய பணி பணிமாற்றத்திற்கு உட்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அவர்கள் பணி மூப்பு அடையும் சமயத்தில்தான் பொள்ளாச்சியில்

சொந்தவீடு வாங்கி குடியேறினார்கள் என்றால் அதற்கு முன்பே அவர்கள் பொள்ளாச்சியில் வீடு வைத்திருந்தார்கள். என் மாமனார் மாமியார் 2003ம் ஆண்டு கோயமுத்தூருக்கு குடி வந்தபோது என் மனைவிக்கு நிரந்தர பணி இல்லை என்றால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் எங்கு பணியில் இருந்தேன் என்றால் மின்துறையில் பணியில் இருந்தேன். அந்த சமயத்தில் நான் பணியில் இருந்ததாலும், என் மனைவி பணி தேடிகொண்டிருந்ததாலும், எங்கள் மகன் பள்ளியில் படித்துகொண்டிருந்ததாலும், எங்களுக்கு உதவியாக இருப்பதற்காக என் மாமனார் மாமியார் கோயமுத்தூருக்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. என் மாமனார் மாமியார் கொரானா தொற்று நோயால் இறந்தார்களா என்றால் என் மாமனார் கொரானா தொற்றால் இறந்தார், மாமியார் இயற்கையாக மரணமடைந்தார். என் மனைவி கொரானா தொற்றினால் இறந்தார் என்றால் ஆமாம். அவர்கள் மூவருக்கு இறுதி சடங்கு செய்தது 9ம் எதிர்மனுதாரர் என்றால் அது சமயம் நான் கொரனா தொற்றால் சிகிச்சையில் இருந்தேன், என் சகோதரர்தான் அனைத்து ஏற்பாடுகள் செய்தார், 9ம் எதிர்மனுதாரர் வந்து சடங்கில் பங்கேற்றார். நான் சொல்வது சரியல்ல என்றும், 9ம் எதிர்மனுதாரர்தான் அனைத்து சடங்குகளையும் செய்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 9ம் எதிர்மனுதாரர் தனது பெற்றோர்களை நிராகரிக்கவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் மாமியார் உயிருடன் இருக்கும்போது அவர்களது சொத்துகள் அனைத்தும் தனது மகளுக்கு மட்டும் செல்லவேண்டும் என்று உறவினர்கள் முன்பு சொன்னதாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதி எந்த உறவினர் முன்னிலையில் சொல்லப்பட்டது என்றால் பொதுவாக யாரேனும் சென்று பார்த்தால் அவ்வாறு சொல்லியுள்ளார்கள். நான் சொல்வது போல் அவ்வாறு அவர்கள் சொல்லவில்லை என்றும், வாரிசுகள் இருவருக்கும் சொத்துகள் போக வேண்டும் என்பதுதான் அவர்கள் விருப்பம் என்றால் சரியல்ல. என் மனைவியின் வருமான வரி சான்றிதழை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வைப்பீடு தொகைகள் என் மாமனார் மாமியாருடையது என்றும், அதுசமயம் என் மனைவி அவர்களோடு இருந்ததால் அவரை Nominee குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் Either or Survivor என்று வைப்பீடு செய்துள்ளது என் மனைவியின் தொகையாகும், மற்றவை என் மாமனார்

மாமியார் அவர்களின் பணமாகும். Either or Survivor என்பது என் மனைவி அவரது பெற்றோரை ஏமாற்றி பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் மனைவியை Nominee ஆக குறிப்பிட்டுள்ள வைப்பீடு தொகைகள் முழுவதும் எனக்கு வர வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை என்றால் ஆமாம். Nominee என்பவர் காப்பாளர் என்றும், வைப்பீடு தொகைகள் அவருக்கு முழுமையாக சேராது என்றால் சரியல்ல. வைப்பீடு தொகைகளில் 9ம் எதிர்மனுதாரருக்கும் சரிபாதி பங்குள்ளது என்றும், அதை நாங்கள் மறுக்கமுடியாது என்றால் சரியல்ல. Either or Survivor வைப்பீடிலும் இருவரும் இறந்துவிட்டதால் அதிலும் 9ம் எதிர்மனுதாரருக்கு சரிபாதி பங்குள்ளது என்றால் சரியல்ல. எனவே முழு தொகைக்கும் நான் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/முரளிதரன்,

ஒம்/எம்.என்.செந்தில்குமார்,
முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு)
கோயமுத்தூர்.